**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 176/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா. 1** |
| Name : | **திரு. ராமச்சந்திரன்** |
| Father's Name/Husband Name: | **திரு. அங்கமுத்து** |
| Village : | அயினார்பாளையம் |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 62/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2, 4 ஆஜர். எதிரி 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் மனைவியின் பெயர் ராணி. எதிரிகள் அனைவரும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிகளுக்குமிடையே கழிவு நீர் வெளியேற்றுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 16.01.2022 அன்று மாலை சுமார் 5 மணியளவில் நானும் என் மனைவியும் எங்கள் வீட்டுக்கு வாசலுக்கு முன்பு கட்டில் போட்டு உட்கார்ந்திருந்தோம். கழிவு தண்ணீர் வருவது சம்மந்தமாக எதிரிகளிடம் கேட்டோம். அதில் எங்களுக்கிடையே வாய் தகராறு ஏற்பட்டது. அந்த தகராறில் எதிரிகள் என்னையும் எனது மனைவியையும் எதுவும் செய்யவில்லை. எதிரிகள் என்னையும் என் மனைவியையும் தகாத வார்த்தைகளால் பேசவில்லை. என்னையும் என் மனைவியையும் எதிரிகள் ஏதும் தாக்கவில்லை. என்னையும் என் மனைவியையும் எதிரிகள் கொலைமிரட்டல் எதுவும் விடுக்கவில்லை. எதிரிகள் யாரும் எனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்யவில்லை.

என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் **உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரித்த போது தற்போது கூறியவாறு தான் சொல்லியுள்ளேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நானும், எனது மனைவியும் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம். சமாதான மனுவில் நான் மட்டும் கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தபோது, கடந்த 16.01.2022 ம் தேதி மாலை 5 மணியளவில் நான் எங்கள் வீட்டு முன்பாக இருந்த போது 1வது எதிரி தங்கதுரை குடிபோதையில் வந்து இரும்பு கம்பியுடன் எனது மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி, எனது மனைவியின் முதுகில் ஓங்கி அடித்தார் என்றும், அதனை தடுத்த என்னை எதிரி தங்கதுரை தகாத வார்த்தைகளால் பேசி இரும்புக்கம்பியால் எனது தலை மற்றும் தோள்பட்டையில் கடுமையாக தாக்கினார் என்றும், எதிரிகள் மணிகண்டன், பிரசாத் மற்றும் சிற்றம்பலம் ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி எனது மனைவியின் சேலையை உருவி மானபங்கம் செய்து, கையாலும் இரும்புக்கம்பியாலும் கடுமையாக தாக்கினார்கள் என்றும், எதிரிகள் இரும்புக்கம்பி மற்றும் கொடுவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அதனால் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தேன் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.